பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் அலுவலகம் (இ) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், உதகண்டலத்தில் பழங்குடியின மக்களுக்கு கிராங்களிலேயே நேரடியாக சென்று முகாம் பதிவு மேற்கொள்ளப்படுகிறது. பழங்குடியின கல்வி நிறுவனங்களில் மாதத்திற்கு நான்று தொழில்நெறி பேச்சுகளும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு வழிகாட்டுதல் நிகழ்ச்சி, தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி தொழில்பயிற்சி நிறுவனங்களிலுள்ள மாணவ, மாணவியர்களுக்கு ஒருங்கிணைந்த தொழிற்பயிற்சி, பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவ மாணவியர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி மற்றும் பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி, மகளிருக்கான சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் தன்னார்வ பயிலும் வட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மற்றும் Staff Selection Commission, Railway Recruitment Board and Bank Probationary Officer/ Clerical Examatiion போன்ற போட்டித் தேர்வுகள் சிறப்பு வல்லுநர்களை கொண்டு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 2000ம் ஆண்டு முதல் தன்னர்வ பயிலும் வட்டம் மூலம் வெற்றி பெற்றவர்கள் விவரம் கீழ்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

| வ.எண் | ஆண்டு | தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2000 | 3 |
| 2 | 2004 | 1 |
| 3 | 2005 | 1 |
| 4 | 2006 | 1 |
| 5 | 2007 | 3 |
| 6 | 2009 | 1 |
| 7 | 2011 | 20 |
| 8 | 2012 | 1 |
| 9 | 2018 | 6 |

வருடத்திற்கு ஒருமுறை பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.